

தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி பொ.மல்லாபுரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் நல்லாட்சியால் ஈர்க்கப்பட்டு தமிழக வெற்றி கழகம் கட்சியிலிருந்து 30க்கும் மேற்பட்டோர் விலகி பொ.மல்லாபுரம் பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன் ஏற்பாட்டில்,வேளாண்மை மற்றும் உழவர்நல துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பெ.பழனியப்பன், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. ஆகியோர் முன்னிலையில் த.வெ.க. கட்சி ரசிகர் மன்ற நகர தலைவர் ராஜா மற்றும் மனோஜ் குமார், சிலம்பரசன், விஜய், தமிழரசன், விக்ரம், பிரசாந்த், தினேஷ் குமார், விஷ்ணு, தமிழரசு, சதீஷ், நித்யா, ஜெய்ரீ, அபிதா,மோனிஷா, சாந்தி, தேவிகா, சின்னதங்கம், ஈஸ்வரி, ரங்கம்மாள், சாலம்மாள் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.






திருச்சி காட்டூர் எஸ்.ஐ.டி அம்பிகாபுரம் அருகில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவெறும்பூர் தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைமை ஏற்று திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிறப்புரையாற்றினார். மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்றிட கழக கொள்கை பரப்புச் செயலாளர் ஐ. லியோனி, பத்திரிக்கையாளர் நெறியாளர் செந்தில்வேல், சிறப்புரையாற்றினர். காட்டூர் பகுதிக் கழகச் செயலாளர் நீலமேகம் நன்றி கூறினார். பொதுக் கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், மாநில அணி நிர்வாகி செந்தில், தொகுதி பார்வையாளர் மணிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சை, பிப்.23-*

*கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சை மத்திய மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளிலும் வெல்லும் தமிழ் பெண்கள் பாசறை பயிற்சிக் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :*



*தமிழ்நாட்டு பெண்களை உலகளவில் வெல்லும் பெண்களாக மாற்றியுள்ள கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தஞ்சாவூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவையாறு, தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதிகளில் திராவிட மாடல் 2.0 கழக ஆட்சி அமைந்திடும் வகையில் வெல்லும் தமிழ்பெண்கள் வீடு வீடாக சென்று மகளிர் பரப்புரை மேற்கொள்ள பயிற்சி பாசறை கூட்டங்கள் கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.*

*ஒரத்தநாடு தொகுதி 24.02.2026 / காலை 11.00 செவ்வாய் கிழமை, எம். ஆர். திருமண மண்டபம், ஒரத்தநாடு.*

*தஞ்சாவூர் தொகுதி 24.02.2026 / மாலை 04.00 செவ்வாய் கிழமை அண்ணா நூற்றாண்டு திருமண மண்டபம், கீழவாசல்.*

*திருவையாறு தொகுதி 25.02.2026 / காலை 11.00 புதன் கிழமை ஜமாத் மஹால் நடுக்கடை*

*திருவையாறு தொகுதி 25.02.2026 / மாலை 04.00 புதன் கிழமை எம்.வி.கே. திருமண மண்டபம், திருக்காட்டுப்பள்ளி.*

*தொகுதி வாரியாக நடைபெறும் பயிற்சி பாசறை கூட்டத்தில் அந்தந்த தொகுதியில் உள்ள இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அந்தந்த தொகுதி வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள பாக மகளிர் பொறுப்பாளர் ஒருவர் வீதம் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உள்ள பாக மகளிர் பொறுப்பாளர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.*

*இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

### திருவாரூர் தொகுதி ஸ்டாலினின் மகளிர் படை

# ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிக்கூட்டம்!

## மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் அறிக்கை!

*திருவாரூர், பிப். 23-*

*திருவாரூர் தொகுதி ஸ்டாலின் மகளிர் படை ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிக்கூட்டம் இன்று (23.02.2026) நடைபெற இருக்கிறது. இது குறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கையில் கூறியுள்ளதாவது:-*

*தமிழ்நாட்டுப் பெண்களை உலக அளவில் வெல்லும் தமிழ் பெண்களாக மாற்றியுள்ள தமிழ்நாடு முதலைமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் இல்லம் வாரியாக சென்று, நமது திராவிட மாடல் அரசு பெண்களுக்கு செய்துள்ள சாதனை திட்டங்களை மார்ச் 8 ம் தேதி வரை பரப்புரை மேற்கொள்வதற்கான குழுவினரில், பாகத்திற்கு ஒரு நபர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட, திருவாரூர் தொகுதி ஸ்டாலின் மகளிர் படை ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி கூட்டம்*



*இன்று (23.02.2026 திங்கட்கிழமை) காலை 11.00. மணிக்கு திருவாரூர் பொன் தமிழ் திருமண அரங்கில் நடைபெறவுள்ளது.*

*அதுசமயம் திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி ஸ்டாலின் மகளிர் படை ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம், கனகமுட்லு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். ஒன்றியச் செயலாளர் நாராயணன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர் வேல்மணி, மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பி.டி.ஏ. தலைவர் சரவணன் மற்றும் ஆசிரிய பெருமக்கள் கழகத்தினர் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் அருகே மேட்டு மகாதானபுரத்தில் முருங்கை பவுடர் தொழிற்சாலையில் உற்பத்தியை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். முருங்கை உற்பத்தியாளர்கள், தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் அருகில் உள்ளனர்.

### அரியலூரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில்

# 127 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர்,பிப். 23–

அரியலூர் மாவட்டம், அரியலூர் போக்குவரத்துக் கழக பணிமனையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், கும்பகோணம் கோட்டத்தைச் சேர்ந்த 6 மண்டலங்களில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் 127 வாரிசுதாரர்களுக்கு (52 மகளிர் உட்பட) பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

127 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி இன்றையதினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிக்காலத்தில் மறைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் கருணை அடிப்படையில் பணிவாய்ப்புக்காக காத்திருந்த நபர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணைகள் வழங்கிட வேண்டும் என உத்தரவிட்டார்கள். போக்குவரத்து துறையில் எத்தகைய சிறப்பான அளவில் பேருந்து சேவைகள் வழங்கபடுகிறதோ அதேபோன்று தொழிலாளர் நலனையும் பாதுகாக்க வேண்டும் அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கும் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார்கள். அதன்படி கும்பகோணம் மண்டலத்தில் 397 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளும், தமிழ்நாடு முழுவதும் 1500 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. 3000 நபர்கள் நேரடி பணி நியமனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட இருக்கின்றனர். அந்த வகையில் காலிப்பணியிடம் ஏற்படும் போது அதனை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. போக்குவரத்து தொழிலாளர்கள் சிறப்பானதொரு ஒத்துழைப்பினை வழங்கி வருகிறார்கள். பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் மகிழ்ச்சியாக பயணம் மேற்கொள்கின்ற சூழலை போக்குவரத்து தொழிலாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையின் போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் வழங்கபட்டதை போன்ற முறையில் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தனர். மேலும் அவ்வாறு வழங்கவேண்டுமெனில் மாதம் ரூ.40 கோடி நிதி தேவை என்ற சூழல் இருந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதித்துறை அலுவலர்களை அழைத்து போக்குவரத்து துறையானது முழுவதும் சேவை வழங்கும் துறையாக உள்ளது. போக்குவரத்து தொழிலாளர்கள் இரவு பகல் பாராமல் பணிபுரிவதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்களுக்கும் இரவு நேரங்களிலும் பேருந்து சேவைகள் கிடைக்கப்பெறுகிறது. மேலும் பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை காலங்களிலும் சிறப்பாக பணிபுரிந்து போக்குவரத்து சேவையை வழங்கி வருகின்றனர். எனவே அவர்களுக்கான நிதியினை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டதை தொடர்ந்து கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 1500 கோடி அளவிற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஆட்சிக்காலத்தில் ஊதிய உயர்வு ஒப்பந்த பேச்சுவார்த்தை 2 முறை நடைபெற்றது என்ற சிறப்பான நிகழ்வு, அதிலும் நான் இந்த துறையின் அமைச்சராக இருந்து இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது, அதுவும் தொழிலாளர்கள் நலன் காக்கும் அரசாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு திகழ்கிறது என்பது நமக்கு பெருமையாக உள்ளது.

இன்றையதினம் பணிநியமன கிடைக்கப்பெற்றுள்ள அனைவரும் போக்குவரத்துத் துறையில் சேவை மனபான்மையுடன் சிறப்பாக பணியாற்ற வேண்டும். அரசு வேலை எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து பணியாற்ற வேண்டும். குடும்ப பொருளாதார சூழலை உயர்த்திக்கொள்ளும் வகையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது இதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், போக்குவரத்து இயக்கம் செய்யப்பட்டு வந்த பழைய பேருந்துகளுக்கு மாற்றாக 8000 புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. கும்பகோணம் மண்டலத்தில் மட்டும் சுமார் 1208 புதிய பேருந்துகள் இயக்கப்படுகிறது. 116 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 1632 வழித்தடங்களில் பேருந்து நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. 400 பேருந்துகளுக்கு கூண்டுகள் மாற்றப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் 98 புதிய பேருந்துகளும், 143 வழித்தடங்கள் நீட்டிப்பு செய்யப்பட்டு பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் ஒவ்வொரு ஆண்டும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் ஓய்வூதிய பணப்பலன்கள் வழங்கப்படுகிறது. தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் என 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒய்வு பெறுவோருக்கும் சேர்த்து சுமார் ரூ.2446 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள். இந்த அறிவிப்பானது எனக்கும் மிகுந்த மனநிறைவை அளித்துள்ளது. இத்துறையானது சுமூகமான முறைக்கு வந்திருப்பதற்கு இதுவே சாட்சியாகும். மேலும் இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளின் மகுடமாக உள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பணியிடத்திற்கு பெண்கள் தேர்வு செய்யப்படுவதற்கு உயரம் 160 செ.மீ அளவில் இருந்த காரணத்தினால் பல பெண்கள் வேலைவாய்ப்புக்காக காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். இச்சூழலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போக்குவரத்து துறையில் பணிவாய்ப்பு பெறுவதற்கான உயரத்தின் அளவினை 160 செ.மீ இருந்து 150 செ.மீ என்ற அளவில் குறைத்து அறிவித்ததன் காரணமாக இன்றைக்கு அதிகளவிலான பெண்கள் பணிவாய்ப்பினை பெறும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

பணி ஆணை பெற்ற அனைவரும் இந்த சலுகையை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கவேண்டும் என கூறினார். இன்றையதினம் பணி நியமனம் பெற்ற அனைவருக்கும் போக்குவரத்து துறையின் சார்பில் என நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், கும்பகோணம் கோட்டத்தைச் சேர்ந்த திருச்சி, கும்பகோணம், நாகப்பட்டினம், கரூர், புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி ஆகிய 6 மண்டலங்களில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் (52 மகளிர் உட்பட) 127 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். அதன்படி திருச்சி மண்டலத்தில் 2 ஓட்டுநர்கள், புதுக்கோட்டை மண்டலத்தில் 1 ஓட்டுநர், நாகப்பட்டினம் மண்டலத்தில் 1 ஓட்டுநர் என மொத்தம் 4 ஓட்டுநர்களுக்கான பணி நியமன ஆணைகளையும், இதேபோன்று கும்பகோணம் மண்டலத்தில் (07 மகளிர் உட்பட) 14 நடத்துநர்களுக்கும், திருச்சி மண்டலத்தில் (11 மகளிர் உட்பட) 26 நடத்துநர்களுக்கும், காரைக்குடி மண்டலத்தில் (21 மகளிர் உட்பட) 40 நடத்துநர்களுக்கும், புதுக்கோட்டை மண்டலத்தில் (4 மகளிர் உட்பட) 10 நடத்துநர்களுக்கும், கரூர் மண்டலத்தில் (3 மகளிர் உட்பட) 9 நடத்துநர்களுக்கும், நாகப்பட்டினம் மண்டலத்தில் (6 மகளிர் உட்பட) 23 நடத்துநர்களுக்கும் என மொத்தம் (52 மகளிர் உட்பட) 122 நடத்துநர்களுக்கும், மேலும் திருச்சி மண்டலத்தில் 1 தொழில்நுட்ப பணியாளருக்கும் என மொத்தம் 127 நபர்களுக்கு இன்றையதினம் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர் மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்,கும்பகோணம் நிர்வாக இயக்குநர் க.தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி.சதீஸ்குமார், மண்டல துணை மேலாளர் ராம்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், தெய்வ.இளையராஜா, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொமுச மண்டல தலைவர் டி.சேகர், அரியலூர் தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன், தொ.மு.ச. நிர்வாகிகள் செல்வம், பட்டு செல்வம், அனைத்து மண்டல உதவி மேலாளர்கள், அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணியின்

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (24.02.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் சேலம் மாவட்டக் கழக அலுவலகமான 'கலைஞர் அறிவாலயத்தில்' நடைபெற உள்ளதால் மாநில நிர்வாகிகள் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:

1. மார்ச் 1 கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்த நாள் குறித்து.
2. 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் சம்பந்தமாக
3. அணியின் ஆக்கப்பணிகள் குறித்து

**டி.செங்குட்டுவன்**
மாநில செயலாளர்.
அமைப்புசாரா ஓட்டுநர் அணி




நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணியின் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் – மோகனூர் சாலை, முல்லை நகரில் அமைந்துள்ள கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர்கள் நா.இளையராஜா (தாட்கோ தலைவர்), சி.ஆனந்தகுமார், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், கலைவாணன், ரமேஷ், பிரபாகரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், ஊராட்சி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.